**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**

**முன்னிலை : அ.விஜயபாரதி பி.ஏ., பி.எல்., (FAC)**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**ஆலங்குடி.**

**2024 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27 ஆம் நாள் புதன்கிழமை**
**(திருவள்ளுவராண்டு 2055, கார்த்திகை திங்கள் 12 ஆம் நாள்)**

**STC No.325/2023**

அரசுக்காக: உணவு பாதுகாப்பு அலுவலர்,
அறந்தாங்கி சரகம்,
புதுக்கோட்டை மாவட்டம். ...... குற்றமுறையிடுபவர்

//எதிராக//

வீ.சாமி,
த/பெ.வீரப்பன்,
அன்னலெட்சுமி ஹோட்டல்,
புதுக்கோட்டை ரோடு,
அறந்தாங்கி,
புதுக்கோட்டை மாவட்டம் - 614 616 ...... எதிரி

இவ்வழக்கு 20.11.2024 அன்று என் முன்பாக இறுதியான விசாரணைக்காக வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை 2 அவர்கள் முன்னிலையாகியும் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.M.S.செந்தில்குமார் B.Sc., B.L. அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்ற ஆய்வில் இருந்து இன்று இந்த நீதிமன்றம் வழங்கிடும்......

## தீர்ப்புரை

அறந்தாங்கி சரக உணவு பாதுகாப்பு அலுவலர் அ.சா.1 ஜேம்ஸ் கடந்த 12.10.2022 அன்று மதியம் 12.30 மணியளவில் தனது எல்லைக்குட்பட்ட அறந்தாங்கி, புதுக்கோட்டை சாலையில் இயங்கிவரும் எதிரி சாமி நடத்திவரும் அன்னலெட்சுமி ஹோட்டல் கடைக்கு ஆய்விற்காக சென்றபோது அங்கு பொதுமக்களுக்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த உணவு பொருளான Cooked poultry meat (Chicken 65) என்ற உணவு பொருளை உணவு மாதிரியாக எடுத்து பகுப்பாய்வகத்திற்கு அனுப்பி பெற்ற அறிக்கையில் அவைகள் தரம் குறைந்த (Substandard) மற்றும் பாதுகாப்பற்ற (Unsafe) உணவுப் பொருள் என கூறப்பட்டுள்ளது. எனவே, எதிரியின் செய்கையானது உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006, பிரிவுகள் 51 மற்றும் 59(i) இன் கீழ் தண்டிக்கதக்க குற்றம் என அறந்தாங்கி உணவு பாதுகாப்பு அலுவலர் எதிரி மீது தனிப்புகார் தாக்கல் செய்துள்ளார்.

2) இந்த வழக்கானது 05.09.2023 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானவுடன் வழக்காவணங்களின் நகல்கள் கு.வி.மு.ச. பிரிவு 207-இன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3) எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் எதிரி மீதான குற்றம் குறித்து போதிய முகாந்திரம் இருப்பதாக கருதியதால் எதிரி மீதான உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006, பிரிவுகள் 51 மற்றும் 59(i) இன் கீழான குற்றம் குறித்து விளக்கி கூறி வினவியபோது எதிரி தன்னை குற்றவாளி இல்லை என்றார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை வழங்கப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4) இந்த வழக்கில் அரசுத் தரப்பில் தனது வழக்கினை நிரூபணம் செய்யும் பொருட்டு அ.சா.1 விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15 வரையான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வழக்கில் சான்றுப்பொருட்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

**5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:**

அறந்தாங்கி நகராட்சி மற்றும் வட்டார உணவு பாதுகாப்பு அலுவலரான அ.சா.1 ஜேம்ஸ் கடந்த 12.10.2022 அன்று மதியம் 12.30 மணியளவில் அறந்தாங்கி-புதுக்கோட்டை சாலையில் இயங்கி வரும் அன்னலெட்சுமி ஹோட்டல் என்ற கடைக்கு ஆய்விற்காக சென்றுள்ளார். அப்போது கடையின் உரிமையாளரான எதிரி சாமி என்பவரிடம் தன்னை அறிமுகப்படுத்தி கொண்ட அ.சா.1 ஜேம்ஸ் எதிரியின் கடையில் ஆய்வு செய்ய வந்த விபரத்தை கூறி, அவரிடம் உணவு பாதுகாப்பு உரிமம் பற்றி கேட்டதற்கு அவர் உரிமம் பெற்றுள்ளதாக (உரிம எண்.22420447000141) தெரிவித்துள்ளார். பின்னர் எதிரியின் கடையில் உள்ள உணவு பொருட்களை ஆய்வு செய்தபோது, கடையில் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த Cooked poultry meat (Chicken 65) என்ற உணவுப்பொருள் உணவு பாதுகாப்பு மற்றும் தரநிர்ணய சட்டத்தின் விதிகளுக்கு புறம்பானதாக இருக்கலாம் என சந்தேகித்து மேற்படி Cooked poultry meat (Chicken 65) உணவு பொருளை அது உள்ள நிலையிலேயே உணவு மாதிரியாக எடுத்து பகுப்பாய்விற்கு அனுப்பவுள்ளதாக கூறியுள்ளார். அதற்கு எதிரி சாமி சம்மதம் தெரிவித்துள்ளார். அப்போது அந்த கடையில் இருந்த கார்த்திக் த/பெ.சிதம்பரம் என்பவரை சாட்சியாக இருக்க அழைத்தபோது அவர் சாட்சியாக இருப்பதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார். மேற்படி கார்த்திக் என்பவரது முன்பாக Cooked poultry meat (Chicken 65) என்ற உணவு பொருளை உணவு மாதியாக எடுத்து, பின் படிவம்-VA இரண்டு பிரதிகள் தயார் செய்து, கடையின் உரிமையாளரான எதிரி சாமியிடமும், சாட்சியாக இருந்த கார்த்திக் என்பவரிடமும் கையொப்பம் பெற்று இரண்டு பிரதிகளில் ஒன்றை எதிரி சாமியிடம் அப்போதே சார்பு செய்துள்ளார்.

பின்னர் அந்த கடையில் உதிரி நிலையிலிருந்த Cooked poultry meat (Chicken 65) என்ற உணவுப் பொருளை 250 கிராம் வீதம் 4 பொட்டலங்களாக பிரித்து பொட்டலமிட இருப்பதை எதிரியிடம் தெரிவித்துள்ளர். எதிரி சாமி அதற்கு சம்மதிக்கவே மேற்கண்ட உணவு பொருளை ரூ.300/- செலுத்தி விலைக்கு வாங்கி, அதற்கான ரொக்க ரசீதில் எதிரி சமியிடமும், சாட்சி கார்த்திக் என்பவரிடமும் கையொப்பம் பெற்றுள்ளார். உணவுப்பொருளை 250 கிராம் அளவிற்கு நான்கு பகுதிகளாக பிரித்து பொட்டலமிட்டு, நான்கு பொட்டலத்தினையும் காக்கி காகிதம் கொண்டு மடித்து பசை தடவி ஒட்டியுள்ளார். பின்னர் நான்கு பொட்டலங்களிலும் லேபில்கள் ஒட்டி அதில் எதிரி சாமியிடம் கையொப்பம் பெற்றுள்ளார். பின்னர் மீண்டும் கெட்டியான காக்கி (ரேப்பர்சீட்) காகிதத்தினால் நான்கு உணவு மாதிரிகளையும் சுற்றி முனைகளை உட்புறமாக மடித்து பசை தடவி சீராக ஒட்டியுள்ளார். பின்னர் புதுக்கோட்டை, உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறையின் நியமன அலுவலரிடம் கையொப்பம் பெற்ற நான்கு வெள்ளை நிற தாளினை (கோடு எண்.016, வரிசை எண்.181/2022-2023 மற்றும் கையொப்பம் கொண்டது) ஒவ்வொரு உணவு மாதிரியிலும் தனித்தனியாக ஒட்டி, ஒவ்வொரு உணவு மாதிரியையும் தனித்தனியாக நூலினால் கீழிலிருந்து மேலாகவும், குறுக்கு நெடுக்காவும் கட்டி அரக்கு சீலிட்டு, ஒவ்வொரு சீலிட்ட உணவு மாதிரிகளில் காக்கி நிற காகிதத்திலும், வெள்ளை நிற காகிதத்திலும் பாதி பாதியாக படும்படி எதிரி சாமியிடம் கையொப்பம் பெற்றுள்ளார். கையொப்பம் பெற்ற உணவு மாதிரிகளில் ஒன்றை பகுப்பாய்வு செய்வதற்காக தனியார் பகுப்பாய்வகத்திற்கு அனுப்ப விருப்பம் உள்ளதா என எதிரி சாமியிடம் கேட்டதற்கு தனக்கு விருப்பமில்லை என்பதை அதற்கான கடிதம் மூலம் தெரிவித்துள்ளார். அக்கடிதத்தில் சாட்சியிடம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது.

பின்னர் உணவு மாதிரி பாக்கெட்டுகளை அ.சா.1 நியமன அலுவலர் அலுவலகத்திற்கு கொண்டுவந்து, உணவு மாதிரிகளை தஞ்சாவூரில் உள்ள உணவு பகுப்பாய்வகத்திற்கு ஆய்விற்காக அனுப்பவுள்ள விபரத்தினை நியமன அலுவலரிடம் தெரிவித்துள்ளார். பின்னர் படிவம்-VI இல் ஐந்தும், மாதிரி முத்திரை படிவம் ஐந்தும் தயார் செய்து, நான்கு உணவு மாதிரி பொட்டலங்களில் ஒன்றுடன் படிவம்-VI இல் ஒன்றையும், மாதிரி முத்திரை படிவம் ஒன்றையும் வைத்து பேக்கிங் செய்து அதனை உணவு பகுப்பாய்வாளர், உணவு பகுப்பாய்வகம், தஞ்சாவூர் என்ற முகவரிக்கு 12.10.2022 அன்றே குளிர்சாதன பெட்டியில்வைத்து நேரடியாக கொண்டுசென்று ஒப்படைத்து ஒப்புதல் பெற்றுள்ளார். மீதம் இருந்த மூன்று உணவு மாதிரிகளுடன் படிவம்-VI இல் மூன்றையும், மாதிரி முத்திரை படிவம் மூன்றையும் சேர்த்து பேக்கிங் செய்து புதுக்கோட்டை நியமன அலுவலரிடம் 12.10.2022 அன்றே ஒப்படைத்து ஒப்புதல் பெற்றுள்ளார்.

உணவு பகுப்பாய்வாளரின் பகுப்பாய்வறிக்கையினை 14 நாட்களில் சமர்ப்பிக்க இயலாத காரணத்திற்கான விளக்கக்கடிதமானது (கடித ந.க.எண்.3723/A4/2022, நாள்.17.10.2022) புதுக்கோட்டை நியமனை அலுவலருக்கு அனுப்பப்பட்டுள்ளது. பின்னர் Report No.Act-1757/2022-2023, Dated:31.10.2022 தேதியிட்ட உணவு பகுப்பாய்வு அறிக்கையானது புதுக்கோட்டை நியமன அலுவலரால் 07.11.2022 அன்று பெறப்பட்டு மேல் நடவடிக்கைக்காக அன்றைய தினமே அ.சா.1 ஜேம்ஸ் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது. உணவு மாதிரி பகுப்பாய்வு அறிக்கையில் எதிரி சாமி என்பவரது கடையில் இருந்து எடுக்கப்பட்ட Cooked poultry meat (Chicken 65) என்ற உணவுப் பொருளானது தரம் குறைந்த (Substandard) மற்றும் பாதுகாப்பற்ற (Unsafe) என கூறப்பட்டுள்ளது. மேற்படி ஆய்வறிக்கை மற்றும் மேல்முறையீட்டுக்கான அறிவிப்பு கடிதம் ஆகியன எதிரி சாமி என்பவருக்கு பதிவு தபால் மூலம் 11.11.2022 அன்று நியமன அலுவலரால் அனுப்பப்பட்டு, பின் அதற்கான ஒப்புதல் அட்டை 14.11.2022 அன்று நியமன அலுவலரால் பெற்றுக்கொள்ளப்பட்டது. மேற்கண்ட பகுப்பாய்வறிக்கை மற்றும் அறிவிப்பு கடிதத்தினை பெற்ற பின்னரும் அறிவிப்பு கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட முப்பது நாட்களுக்குள் எதிரி மேல் முறையீடு ஏதும் செய்துக்கொள்ளவில்லை.

எனவே, உணவுப்பொருளின் விற்பனையாளரான எதிரி மீது வழக்கு தொடர்வதற்கான அனுமதி கடிதத்தினை சென்னையில் உள்ள உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை ஆணையர் அவர்களுக்கு நியமன அலுவலர் மூலம் அனுப்பியுள்ளார். நியமன அலுவலர் அனுப்பிய Letter R.No.1388/A1/FSSA/2022, தேதி: 18.12.2022 கடிதத்தினை ஏற்ற ஆணையர் அவர்கள் எதிரி மீது வழக்கு தொடர்வதற்கான கடித எண்.D.Dis.No.11477/2022-23/S7/FSSA, Date.09.06.2023 இன் படி அனுமதி அளித்ததை தொடர்ந்து எதிரி மீது இந்த தனிப்புகாரினை அ.சா.1 ஜேம்ஸ் தாக்கல் செய்துள்ளார். அரசு தரப்பில் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றுகின்ற அம்சங்களை குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் விளக்கி வினவியபோது, எதிரி பொய் சாட்சி என்றும், எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உள்ளது என்றும் பதிலுரைத்தபோதிலும் எதிரி தரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**7) இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் :**

எதிரி மீதான உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006, பிரிவுகள் 51 மற்றும் 59(i) இன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்துள்ளார்களா ? என்பதே ஆகும்.

**8) தீர்வுக்குரிய பிரச்சனை :**

இருதரப்பு வாதங்களும் அரசு தரப்பு சாட்சியங்களும் சான்றாவணங்களும் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது.

9) எதிரி மீதான உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006, பிரிவுகள் 51 மற்றும் 59(i) இன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்த அரசு தரப்பு சாட்சியங்கள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரியின் கடையில் தரமற்ற Cooked poultry meat (Chicken 65) என்ற உணவு பொருளானது விற்பனை செய்யப்படவில்லை என்றும், எதிரியின் கடைக்கு உரிமம் உள்ளது என்பதை அ.சா.1 தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், உரிமம் உள்ள கடையில் பாதுகாப்பற்ற உணவு பொருட்கள் விற்பனை செய்ய வாய்ப்பில்லை என்றும், புள்ளிவிவர கணக்கிற்காக எதிரி மீது இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று வாதிட்டார்.

10) எதிரி தரப்பு வழக்கறிஞரின் மேற்கண்ட வாதம் குறித்த அரசு தரப்பு சாட்சியங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அ.சா.1 ஜேம்ஸ் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறார். அவர் தனது சாட்சியத்தில் "கடந்த 12.10.2022 அன்று மதியம் 12.30 மணியளவில் அறந்தாங்கி, புதுக்கோட்டை சாலையில் இயங்கிவரும் எதிரி சாமி என்பவரது அன்னலெட்சுமி ஹோட்டல் கடைக்கு ஆய்விற்காக சென்றேன். அங்கிருந்த கடையின் உரிமையாளரான எதிரியிடம் என்னை அறிமுகப்படுத்திக்கொண்டு உணவு மாதிரிகள் எடுக்க உள்ளதாக தெரிவித்தேன். அதற்கு அவர் சம்மதித்து அ.சா.ஆ.5 ஒப்புதல் அறிக்கை ஒன்றை கொடுத்தார். பின்னர் Cooked poultry meat (Chicken 65) என்ற உணவு பெருளை 250 கிராம் வீதம் 4 பொட்டலங்களாக ரூ.300/- விலை கொடுத்து வாங்கினேன். அதற்கான ரொக்க ரசீது அ.சா.ஆ.3 ஆகும்" என சாட்சியம் அளித்துள்ளார்.

11) அ.சா.ஆ.5 ஒப்புதல் அறிக்கை மற்றும் அ.சா.ஆ.3 ரொக்க இரசீது ஆகியன பரிசீலனை செய்யப்பட்டது. அ.சா.ஆ.5 விற்பனையாளர் ஒப்புதல் அறிக்கையில் எதிரி சாமியின் அன்னலெட்சுமி என்ற ஹோட்டல் கடையிலிருந்து Cooked poultry meat (Chicken 65) என்ற உணவு பெருளை 250 கிராம் வீதம் 4 பொட்டலங்களாக ரூ.300/- விலை கொடுத்து அ.சா.1 ஜேம்ஸ் பெற்றுக்கொண்டார் என பதிவு செய்யப்பட்டு அதில் எதிரியும் கையொப்பம் செய்துள்ளார். அ.சா.ஆ.5 ஒப்புதல் அறிக்கையில் உள்ள சங்கதிகளையும், அதில் உள்ள தனது கையொப்பத்தினையும் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின்போது மறுக்கவில்லை. அதேபோன்று அ.சா.ஆ.3 ரொக்க ரசீதிலும் அ.சா.1 ஜேம்ஸ் ரூ.300/- கொடுத்து Cooked poultry

meat (Chicken 65) என்ற உணவு பெருளை விலைக்கு பெற்றுக்கொண்டார் என பதிவு செய்யப்பட்டு எதிரி கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். மேலும், எதிரியின் கடையில் ஆய்வு மேற்கொண்டு உணவு மாதிரிக்காக 1 கிலோ Cooked poultry meat (Chicken 65) என்ற உணவு பெருளை அ.சா.1 ஜேம்ஸ் பெறும் வரை கார்த்திக் என்பவர் உடன் இருந்துள்ளார். அதனையும் எதிரி தரப்பில் மறுக்கவில்லை. இதிலிருந்து 12.10.2022 அன்று எதிரியின் அன்னலெட்சுமி என்ற ஹோட்டல் கடைக்கு ஆய்விற்காக சென்ற அ.சா.1 ஜேம்ஸ் அங்கிருந்து 1 கிலோ Cooked poultry meat (Chicken 65) என்ற உணவு பெருளை உணவு மாதிரியாக ஆய்விற்கு எடுத்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு தெளிவாக தெரிய வருகின்றது.

12) மேலும், அ.சா.1 ஜேம்ஸ் தனது சாட்சியத்தில் "எதிரியின் நிறுவனத்தில் உணவு மாதிரிகள் எடுக்கப்பட்ட 12.10.2022 அன்று மாதிரி முத்திரையிட்டு நான்கு உணவு மாதிரிகளையும் தஞ்சாவூர் பகுப்பாய்வகத்திற்கு பார்சல் செய்து அனுப்பி வைத்தேன்" என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரியின் கடையிலிருந்து எடுக்கப்பட்ட உணவு மாதிரிகள் தஞ்சாவூர் பகுப்பாய்வகத்திற்கு கொரியரில் அனுப்பியதற்கான ரசீது அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் "கோயம்புத்தூர் உணவு பகுப்பாய்வகத்திற்கு ஆய்விற்காக அனுப்பப்பட்ட உணவு மாதிரிகள் பாதுகாப்பற்றது என 31.10.2022 தேதியிட் உணவு பகுப்பாய்வு அறிக்கையில் (அ.சா.ஆ.12) கூறப்பட்டுள்ளது. பகுப்பாய்வறிக்கையின் நகல் மற்றும் மேல்முறையீடு செய்வதற்கான விவரம் அடங்கிய கடிதத்தினை (அ.சா.ஆ.13) எதிரிக்கு 11.11.2022 அன்று மாவட்ட நியமன அலுவலர் அனுப்பி வைத்துள்ளார். இருப்பினும் எதிரி உரிய காலத்திற்குள் மேல்முறையீடு செய்துகொள்ளவில்லை. எனவே, ஆணையரின் அனுமதியுடன் எதிரி மீது இந்த தனிப்புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

13) அ.சா.ஆ.12 உணவு பகுப்பாய்வறிக்கை பரிசீலனை செய்யப்பட்டது. அதில் எதிரியின் நிறுவனத்திலிருந்து உணவு மாதிரிக்காக எடுக்கப்பட்ட Cooked poultry meat (Chicken 65) என்ற உணவு பொருள் தரம் குறைந்த (Substandard) மற்றும் பாதுகாப்பற்ற (Unsafe) என ஆய்வில் கண்டறியப்பட்டது என தெளிவாக கூறப்பட்டுள்ளது. எதிரியின் நிறுவனத்தில் எடுக்கப்பட்ட உணவு மாதிரிகள் தரம் குறைந்த (Substandard) மற்றும் பாதுகாப்பற்ற (Unsafe) என பகுப்பாய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதால் இதுகுறித்து எதிரி மேல்முறையீடு செய்துகொள்ளலாம் என்ற விவரத்துடன் எதிரிக்கு நியமன அலுவலர் அ.சா.ஆ.13 கடிதத்தினை அனுப்பியுள்ளார். இருப்பினும் எதிரி தரப்பில் மேல்முறையீடு செய்யப்படவில்லை. எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் எதிரியின் கடைக்கு (உரிம எண்.22420447000141) உரிமம் உள்ளது எனவும், அதில் தரமற்ற மற்றும் பாதுகாப்பற்ற Cooked poultry meat (Chicken 65) என்ற உணவு பொருள் விற்பனை செய்வதற்கு வாய்ப்பில்லை என்றும் வாதிட்டார்.

14) எதிரியின் கடையில் எடுக்கப்பட்ட உணவு மாதிரிகள் பாதுகாப்பற்றது என பகுப்பாய்வில் கண்டறியப்பட்டது என அ.சா.ஆ.12 உணவு பகுப்பாய்வு அறிக்கையில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. பகுப்பாய்வு அறிக்கையின் முடிவினை எதிர்த்து மேல்முறையீடு செய்துகொள்ள எதிரிக்கு போதுமான கால அவகாசத்துடன் வாய்ப்பு வழங்கப்பட்ட போதிலும் எதிரி தரப்பில் மேல்முறையீடு செய்யப்படவில்லை. எனவே, எதிரி தரப்பு வழக்கறிஞரின் மேற்கண்ட வாதம் ஏற்கத்தக்கதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்ட அரசு தரப்பு சாட்சியங்களின் பரிசீலனையிலிருந்து எதிரியின் கடையிலிருந்து எடுக்கப்பட்ட உணவு மாதிரிகள் தரம் குறைந்த (Substandard) மற்றும் பாதுகாப்பற்ற (Unsafe) உணவு பொருட்களாக இருந்தது என்பது அரசு தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்களுடன் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

15) எதிரியின் மீதான உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006, பிரிவுகள் 51 மற்றும் 59(i) இன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரியை குற்றவாளி என தீர்மானித்து எதிரிக்கு அளிக்கப்படும் தண்டனை பற்றி குவிமுச பிரிவு 255(2) இன் கீழ் வினவியபோது எதிரி தன் மீது இதுபோன்ற முன்வழக்குகள் ஏதும் இல்லை என்றும், தான் தற்போது பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதாகவும், இனிவரும் காலங்களில் இதுபோன்று எந்தவொரு குற்ற செயலிலும் ஈடுபடமாட்டேன் எனவும், தனது ஒருவரின் வருமானத்தை நம்பியே தனது குடும்பம் உள்ளது என்றும், தனக்கு குறைந்தபட்ச தண்டனை மட்டுமே விதிக்கவேண்டுமென்றும் வேண்டினார்.

16) எதிரியின் வேண்டுதல் பரிசீலனை செய்யப்பட்ட போது அரசு தரப்பு குற்றவியல் வழக்கறிஞர் எதிரியின் குற்றச்செய்கையானது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் எதிரிக்கு அதிகபட்ச தண்டனை விதிக்கவேண்டுமென்று வாதிட்டார். எதிரியின் வேண்டுகோள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிரி மீது இதுபோன்ற முன்வழக்குகள் ஏதும் இல்லை என்பது குறித்து அரசு தரப்பு மறுப்பு தெரிவிக்கவில்லை. மேலும், எதிரியின் குற்றச்செய்கையினால் பொதுமக்கள் யாரும் பாதிக்கப்பட்டதாக எந்த விதமான புகாரும் சாட்சியமும் அரசு தரப்பில் முன்வைக்கப்படவில்லை. எதிரி முதன்முறை குற்றவாளி என்பதாலும், எதிரியின் வயது, குடும்பச்சூழல் கருதி எதிரி மீதான குற்றத்திற்கு கீழ்கண்ட தண்டனையை விதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**இறுதியாக,** எதிரி மீதான உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணயச் சட்டம் 2006, பிரிவுகள் 51 மற்றும் 59(i) இன் கீழான குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என முடிவு செய்து எதிரியை குற்றவாளி என தீர்மானித்து, பிரிவு 51 இன் கீழான குற்றத்திற்கு எதிரி நீதிமன்றம் கலையும் வரை நீதிமன்றத்தின் அறையில்

இருக்கவேண்டுமென்ற தண்டனையும், ரூ.10,000/- அபராதம் விதித்தும், அபராதத் தொகையினை செலுத்த தவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், பிரிவு 59(i) இன் கீழான குற்றத்திற்கு எதிரி நீதிமன்றம் கலையும் வரை நீதிமன்றத்தின் அறையில் இருக்கவேண்டுமென்ற தண்டனையும், ரூ.10,000/- அபராதம் விதித்தும், அபராதத் தொகையினை செலுத்த தவறினால் ஒரு மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், கு.வி.மு.ச பிரிவு 255(2) இன் கீழ் தண்டணை வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

அ) இவ்வழக்கின் எதிரி குற்ற தீர்ப்புக்கு உள்ளாகி இருப்பதால் எதிரிக்கு தீர்ப்பின் நகலை கு.வி.மு.ச பிரிவு 363(1) ன் கீழ் இலவசமாக வழங்க உத்தரவிடப்படுகிறது.

ஆ) வழக்கு சொத்து ஏதும் இல்லை என்பதால் வழக்கு சொத்து குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இ) இந்த வழக்கில் மேல்முறையீட்டுக் காலத்திற்குப் பிறகு எதிரியால் எழுதிக் கொடுக்கப்பட்ட பிணையப்பத்திரத்தினை ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு பின் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்த பின்னர் இன்று 2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒ/ம்.அ.விஜயபாரதி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**

**<u>சாட்சி மற்றும் சான்றாவணப்பட்டியல் :</u>**

**<u>அரசு தரப்பு சாட்சி :</u>**
அ.சா.1 ஜேம்ஸ் (உணவு பாதுகாப்பு அலுவலர்)

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் :</u>**

**அ.சா.ஆ.1** : 23.07.2021 தேதியிட்ட உணவு பாதுகாப்பு ஆணையர் அவர்களின் ஆணை கடித நகல் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அ.சா.ஆ.2** : எதிரி வீ.சாமிக்கு சாப்பு செய்யப்பட்ட படிவம்-VA அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அ.சா.ஆ.3** : 12.10.2022 அன்று எதிரி வீ.சாமி கடையிலிருந்து உணவு மாதிரிகள் விலைக்கு வாங்கப்பட்டதற்கான ரொக்க ரசீது அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அ.சா.ஆ.4** : 12.10.2022 அன்று எதிரியின் கடையிலிருந்து எடுக்கப்பட்ட உணவு மாதிரிகளை தனியார் பரிசோதனை கூடத்திற்கு அனுப்ப விருப்பமுள்ளதா என்று எதிரியிடம் கேட்டு பெற்ற கடிதம் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அ.சா.ஆ.5** : 12.10.2022 தேதியிட்ட 1 ஆவது எதிரி அளித்த விற்பனையாளர் ஒப்புதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அ.சா.ஆ.6** : 12.10.2022 தேதியிட்ட படிவம்-VI அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அ.சா.ஆ.7** : 12.10.2022 தேதியிட்ட மாதிரி முத்திரை பதித்த தாள் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அ.சா.ஆ.8** : 12.10.2022 அன்று எதிரியின் கடையில் உணவு மாதிரி எடுத்து அதனை பகுப்பாய்விற்கு அனுப்புவது குறித்து நியமன அலுவலருக்கு கொடுத்த கடிதம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அ.சா.ஆ.9** : 12.10.2022 தேதியிட்ட நியமன அலுவலரால் அளிக்கப்பட்ட ஒப்புகை கடிதம் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அ.சா.ஆ.10** : உணவு மாதிரிகளை தஞ்சாவூர் பகுப்பாய்வகத்திற்கு நேரடியாக அனுப்பியதற்கான ரசீதுகள் (2 எண்ணிக்கை) அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அ.சா.ஆ.11** : உணவு பகுப்பாய்வாளரிடமிருந்து பெறப்பட்ட 14 நாட்கள் காலதாமதத்திற்கான விளக்க கடிதம் அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அ.சா.ஆ.12** : தஞ்சாவூர் உணவு பகுப்பாய்வகத்திலிருந்து அனுப்பப்பட்ட 31.10.2022 தேதியிட்ட உணவு பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அ.சா.ஆ.13** : உணவு பகுப்பாய்வு அறிக்கையின் நகலினை நியமன அலுவலர் அவர்கள் எதிரிக்கு அனுப்பியதற்கான கடிதம் மற்றும் ரசீது அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அ.சா.ஆ.14** : புதுக்கோட்டை நியமன அலுவலர் அவர்களுக்கு எதிரி மீது வழக்கு தொடர அனுமதி கோரி அனுப்பப்பட்ட கடிதம் அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அ.சா.ஆ.15** : சென்னை உணவு பாதுகாப்பு மருந்தக நிர்வாகத்துறையின் ஆணையரால் எதிரி மீது வழக்கு தொடர அனுப்பப்பட்ட அனுமதி கடிதம் அ.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>சான்று பொருள் :</u>** இல்லை.

**<u>எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :</u>** ஏதுமில்லை.

**<u>குறிப்பு :</u>**

1. தீர்ப்பு பற்றிய தகவல் காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டது.
2. இவ்வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.
3. இவ்வழக்கில் சாட்சிகள் 3 முறைக்கு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அழைக்கப்படவில்லை.

**ஒ/ம்.அ.விஜயபாரதி,**
**நீதித்துறை நடுவர்,**
**அறந்தாங்கி.**